**OS.100/2022**

**நாள். 15.04.2026.**

**பி.வா.சா. 1 – சுசீந்திரன்**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>

நான் மோர்க்கடைசெட்டித் தெருவில் உள்ள வீட்டில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி வீடு வழக்கில் 3 வது அயிட்டமாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீடு என் தகப்பனார் மற்றும் வாதி ரங்கராஜன் பெயரில் கிரையம் பெறப்பட்ட சொத்து என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டுக்கு வரிவிதிப்பு இன்றுவரை வாதி யின் பெயரில் உள்ளது என்றும், வாதிதான் வரிசெலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் வீட்டிற்கு நான்தான் வரிசெலுத்தி வருகிறேன். எந்த வருடம் முதல் வரி செலுத்தி வருகிறேன் என்றால் ஞாபகமில்லை, வரிரசீதுகளை பார்த்துதான் கூறமுடியும். நான் செலுத்திய வரி ரசீதுகள் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வரிரசீதுகள் நான் குடியிருக்கும் வீட்டிற்குரியது என்றால் சரிதான். தாவா 3 ம் இலக்க சொத்திற்கு சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வரிரசீதுகள் 2015 ம் ஆண்டுவரை செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வரிரசீதுகள் (7 எண்ணிக்கை) **வா.சா.ஆ.28**. அதற்கு பிறகு நான் வரி செலுத்தி வருகிறேன். தாவா 2 ம் இலக்க சொத்து குடோன் என்றால் சரிதான். அந்த சொத்து யாரிடம், எப்போது வாங்கப்பட்டது என தெரியுமா என்றால் 1976 ம் வருடம் வாங்கப்பட்டுள்ளது, யாரிடமிருந்து வாங்கப்பட்டது என்பது தெரியாது. அந்த சொத்து என் தகப்பனாரால் வாங்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் இணையவழியில் பெறப்பட்ட கிரைய ஆவணம் 2 ம் இலக்க சொத்தை என் தகப்பனாரால் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணம் **வா.சா.ஆ.29**. தாவா 2 ம்இலக்க சொத்திற்குரிய பட்டா யார் பெயரில் இருந்து வருகிறது என்றால் தெரியாது. வரி யார் செலுத்தி வருகிறார்கள்

என்றால் நான்தான். எப்போது இருந்து என்றால் ஞாபகம் இல்லை, வரிரசீதுகளை பார்த்தால்தான் கூறமுடியும். தாவா 2ம் இலக்க சொத்தின் வடக்கு சுவர் சம்மந்தமாக நானும், வாதியும் சேர்ந்து வேலுச்சாமி என்பவருடன் ஒரு உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த பொதுச்சுவர் உடன்படிக்கை பத்திரம் என்றால் சரிதான். அந்த ஆவணம் **வா.சா.ஆ.30**. தாவா 4ம் இலக்க சொத்து என் தாயார் ஆனந்தவள்ளி பெயரில் 1986ல் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். அந்த கிரையப்பத்திரத்தின் அசல் என் வசம்தான் உள்ளது என்றால் சரியல்ல, பத்திர எழுத்தர் ராமநாதன் (வா.சா.2) வசம் உள்ளது. தாவா 4ம்இலக்க சொத்திற்குரிய பட்டா மற்றும் வரிரசீதுகள் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வரிரசீதுகள் என் தாயார் ஆனந்தவள்ளி பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த வரிரசீதுகள் 2000 – 2002 மற்றும் 2011 – 2015 வரை செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வரிரசீதுகள் ( 10 எண்ணிக்கை) **வா.சா.ஆ.31**. 2015க்கு பிறகு 4ம் இலக்க சொத்திற்கு என் தாயார் பெயரில் நான் செலுத்திய வரிரசீதுகள் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். என் தாயார்பெயரில் வாங்கிய சொத்துக்கள் அருணா ஸ்டோர்ஸ் வருமானத்திலிருந்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல, என் அம்மாவின் நகைகளை எனது தகப்பனார் அடகுவைத்து வாங்கினார். அருணா ஸ்டோரில் பங்குதாரராக நான் சேர்ந்தது 2003ம் வருடம் என்றால் சரிதான். 2003ம் ஆண்டிலேயே நான், வாதி மற்றும் என் தகப்பனார் பங்குதாரர்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்பட ஆவணத்தில் உள்ள முதல் பக்கம் 01.10.2003 முதல் நான், வாதி மற்றும் என் தகப்பனார் மூவரும் பங்குதாரர்களாக வணிகவரித்துறை அலுவலரிடம் சமர்பித்த படிவம் 9 என்றால் சரிதான். 2004ம் ஆண்டு என் தகப்பனார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் தகப்பனார் இறந்த பிறகு நானும், வாதி ரங்கராஜனும்தான் அருணா ஸ்டோர்ஸை கூட்டு பங்குதாரர்களாக நடத்தி வந்தோம் என்றால் சரிதான். அருணா ஸ்டோர்ஸ் கூட்டு

பங்குதாரர் நிறுவனம் என பதிவு செய்துள்ளோம் என்றால் இல்லை, ஆனால் ஆவணம் எழுதப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் வணிகவரித்துறை அலுவலரிடம் நானும், வாதியும் சேர்ந்து கொடுத்த விண்ணப்பத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட பதிவு சான்றிதழ் என்றால் சரிதான். அந்த பதிவு சான்றிதழ் வா.சா.ஆ.17 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான், முதல் கையெழுத்து வாதியுடையது என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் புகைப்பட நகல் வா.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.18 ற்கு பதிலாக அதற்குரிய அசல் **வா.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தின் அசல் வா.சா.ஆ.19 க்குரியது என்றால் சரிதான். அந்த ஆவணத்தின்படி நானும், வாதியும் வருடத்திற்கு ரூ.70 ஆயிரம் சம்பளமாக எடுத்துக்கொள்வது என்றும், 23.01.2004 தேதியிட்ட கூட்டான்மை ஆவணத்தின்படி நடந்து கொள்வது என்றும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.19 க்குரிய அசல் **வா.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அருணா ஸ்டோர்ஸ்க்கு தேவையான பாடபுத்தகங்கள், நோட்டுகள் மற்றும் அங்கு விற்பனையாகக்கூடிய பொருட்கள் சம்மந்தமாக வாதிதான் சேல்ஸ் ஆர்டர் போடுவார் என்றால் சரிதான். நான் கடையிலிருந்து வரும் வாடிக்கையாளர்களுக்கு எடுத்துக்கொடுப்பேன். அருணா ஸ்டோர்ஸ் சார்பில் செலுத்த வேண்டிய வருமான வரி கணக்குகளை வாதி கவனித்து வருமானவரி செலுத்துவார் என்றால் சரிதான். வருமானவரி துறையிடமிருந்து கூடுதலாக செலுத்தப்பட்ட வரி திருப்பி செலுத்தப்படும்போது அதை வாதிதான் பெற்றுக்கொள்வார் என்றால் சரிதான். அருணா ஸ்டோர்ஸ் உள்ள 1ம் இலக்க சொத்துக்கு சொத்துவரி வாதிதான் செலுத்தி வந்தார் என்றால் சரிதான், அவர் பிரிந்த பிறகு நான் செலுத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் வரிரசீதுகள் தாவா 1ம் இலக்க சொத்திற்கு செலுத்தப்பட்ட வரிரசீதுகள் என்றால் சரிதான். அந்த வரிரசீதுகள் 2000 முதல் 2002

வரையிலும், 2011 முதல் 2016 வரையிலும் செலுத்தப்பட்டுள்ளது. (7 எண்ணிக்கை) அந்த வரிரசீதுகள் **வா.சா.ஆ.32**. தாவா 6ம் இலக்கச் சொத்து மோர்க்கடை செட்டித் தெருவில் உள்ள வாதி குடியிருந்து வரும் வீடு என்றால் சரிதான். வீட்டிற்கு பின்புறம் இருந்த கொல்லை தற்போது குடோனாக உள்ளது. தாவா 6ம் இலக்க சொத்து 1983ம் ஆண்டில் வாசாஆ.1 பாகபிரிவினை ஆவணம் மூலம் பிரித்துக்கொண்டதில் என் தகப்பனாருக்கும், வாதியின் தகப்பனாருக்கும் டி செடியூல் சொத்தாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதியின் தகப்பனார் இறந்த பிறகு வாதியின் பெயரிலும், என் தகப்பனார் இறந்த பிறகு என் பெயரிலும் கூட்டுப்பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த பட்டா மாறுதல் உத்தரவு என்றால் சரிதான். அந்த பட்டா மாறுதல் உத்தரவு **வா.சா.ஆ.33**. தாவா 6ம் இலக்க சொத்திற்கு தற்போதுவரை என் தகப்பனார் பெயரிலும், வாதியின் தகப்பனார் பெயரிலும் வரிரசீதுகள் ஏற்பட்டு செலுத்தப்பட்டு வருகிறது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வரிரசீதுகள் என் தகப்பனார் மற்றும் வாதியின் தகப்பனார் பெயரில் செலுத்தப்பட்ட வரி ரசீதுகள் என்றால் சரிதான். அந்த வரி ரசீதுகள் ( 21 எண்ணிக்கை) **வா.சா.ஆ.34**. தாவா 6ம் இலக்க சொத்திற்கு நான் வரி செலுத்தி வரவில்லை என்றால் சரிதான். வாதிதான் செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். தாவா 5 மற்றும் 7 முதல் 11 வரையிலான சொத்துக்கள் என் பெயரிலும், வாதியின் பெயரிலும் கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கில் கண்ட அனைத்து சொத்துக்களுக்கும் வாதிதான் பட்டா மற்றும் வரிவகையறாக்கள் செலுத்தி வந்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் தாவா 1, 3, 5, 8, 11 சொத்துகளுக்குரிய என் பெயரிலும், வாதியின் பெயரிலும் கூட்டாக உள்ள பட்டாக்கள் என்றால் சரிதான். தாவா 1, 3, 5, 8 க்களுக்கு ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு **வா.சா.ஆ.35 – 38**. தாவா 11ம் இலக்க சொத்துக்குரிய டவுன் சர்வே பில்ட்ரிஜிஸ்டர் நகல் **வா.சா.ஆ.39**. என்னிடம் காட்டப்படும் வரிரசீதுகள் தாவா 11ம் இலக்க சொத்துக்கு என்

பெயரிலும், வாதி பெயரிலும் கூட்டாக ஏற்பட்ட வரிரசீதுகள் என்றால் சரிதான். அந்த வரி ரசீதுகள் (5 எண்ணிக்கை) **வா.சா.ஆ.40**. தாவா 11ம் இலக்க சொத்து முதன் முதலில் வாதி தியாகராஜன் என்பவரிடமிருநது கிரையம் வாங்கினார் என்றும், அந்த சொத்தை பொறுத்து வழக்கு நடந்ததால் பின்னிட்டு அவருக்கே கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். தாவா 11ம் இலக்க சொத்து சம்மந்தமாக மேற்படி தியாகராஜனின் தகப்பனார் வழக்கு தாக்கல் செய்து சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் வாதி ரங்கராஜனுக்கு ஆதரவாக தீர்ப்பானது என்றால் சரிதான். சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் தீர்ப்பான பிறகு மீண்டும் தாவா 11ம் இலக்க சொத்தை வாதி என் பெயரிலும், அவர் பெயரிலும் கூட்டாக கிரையம் பெற்றார் என்றால் சரிதான். தாவா 1 முதல் 11 இலக்க சொத்துக்களுக்கு நான் எந்த வருடம் முதல் வரிசெலுத்தி வருகிறேன் என்றால், என் அனுபவத்தில் உள்ள சொத்துக்களுக்கு நான்தான் வரி செலுத்தி வருகிறேன். எந்த வருடம் முதல் என குறிப்பிட்டு சொல்ல முடியாது, வரிரசீதுகளை பார்த்தால்தான் கூறமுடியும். நான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யும்போது பி.வா.சா.ஆ.1 முதல் 7 வரிரசீதுகள் தவிர 2015ம் ஆண்டுக்கு பிறகு 2025ம் ஆண்டு வரை செலுத்தி என் கைவசம் உள்ள வரிரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். அருணா ஸ்டோர்சில் இருந்து கிடைக்கும் வருமானத்தை ஒவ்வொரு வருடமும் ஆடிப்பெருக்கு (ஆடி 18) அன்று நானும், வாதியும் சரிசமமாக பிரித்துக்கொள்வோம் என்றால் சரிதான். அவ்வாறு பிரித்துக்கொள்ளும்போது வரவுசெலவு கணக்குகளை சரிபார்த்துத்தான் பிரித்துக்கொள்வோம் என்றால் சரிதான். 2018ம் ஆண்டு ஆடிப்பெருக்கு வரை நானும், வாதியும் வருமானத்தை பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். தாவா 5, 7 முதல் 11 வரையிலான சொத்துக்கள் அனைத்தும் அருணா ஸ்டோர்ஸ் வருமானத்திலிருந்து என் பெயரிலும், வாதி பெயரிலும் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். தாவா 5, 7 முதல் 11 வரையிலான சொத்துக்கள் அனைத்தும்

2003 முதல் 2010 வரையிலான காலகட்டத்தில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். 2018 ம் ஆண்டுவரை எனக்கும், வாதிக்கும் எந்தவிதமான மனஸ்தாபமும் இல்லை என்றால் சரிதான். வாதி என் பெயரிலும், என் மனைவி மற்றும் உறுப்பினர்கள் பெயரில் LIC நிறுவனத்தில் ஆயுள்காப்பீடு எடுத்து அதற்குரிய பிரிமியத்தையும் செலுத்தி வந்தார் என்றால் சரிதான். அந்த வகையில்தான் நாங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் சந்தோசமாக தாவா 3 ம் இலக்க சொத்தில் நானும், தாவா 6 ம் இலக்க சொத்தில் வாதியும் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான்.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.